©
தமிழ்நாடு அரசு
2017

கையெழுத்துத் தொடர்

வாய்மையே வெல்லும்

# நிதி (படிகள்)த் துறை

## அரசு ஆணை எண். 300, நாள் 10.10.2017.

*(ஹேவிளம்பி, புரட்டாசி–24, திருவள்ளுவர் ஆண்டு 2048)*

**படிகள்** – அகவிலைப்படி – 01.07.2017 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

பின்வருவனவற்றைப் படிக்கவும்:-

1 அரசாணை (நிலை) எண் 105, நிதி (படிகள்)த் துறை, நாள் 26.04.2017.
2 இந்திய அரசு, புதுடில்லி, நிதியமைச்சகம், செலவுத் துறையின் 20.09.2017ஆம் நாளிட்ட அலுவலகக் குறிப்பாணை எண்.1 /9/ 2017–E–II (B).
3 இந்திய அரசு, புதுடில்லி, நிதியமைச்சகம், செலவுத் துறையின் 26.09.2017ஆம் நாளிட்ட அலுவலகக் குறிப்பாணை எண்.1 /3/ 2008–E-II (B).

********

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசு ஆணையில், மாநில அரசு அலுவலர்களுக்கு கீழே விவரித்துள்ளபடி, திருத்தப்பட்ட அகவிலைப்படி வீதத்தை அனுமதித்து ஆணைகள் வெளியிடப்பட்டன:-

| வழங்கப்படும் நாள் | அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| 01.01..2017 முதல் | அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 136 சதவீதம் |

2. இந்திய அரசு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தனது அலுவலகக் குறிப்பாணையில், மத்திய அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப்படியினை 01.07.2017 முதல் அடிப்படை சம்பளத்தில் 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக உயர்த்துவதற்கான தனது முடிவினை அறிவித்துள்ளது.

3. இந்திய அரசு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தனது அலுவலகக் குறிப்பாணையில், ஆறாவது மத்திய சம்பள ஆணையம் பரிந்துரைத்த

ஊதிய விகிதத்தில் தொடர்ந்து ஊதியம் பெறும் மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படியினை தற்போதுள்ள 136 சதவீதத்திலிருந்து 139 சதவீதமாக முன்தேதியிட்டு 01.07.2017 முதல் உயர்த்தி ஆணையிட்டுள்ளது.

4. 2016க்கு முந்தைய ஊதிய விகிதத்தில் சம்பளம் பெறுவோருக்கான அகவிலைப்படியினை உயர்த்தி வழங்கிடும் மத்திய அரசின் முடிவினை அரசு கவனமாக ஆய்வு செய்து மாநில அரசு ஊழியருக்கான அகவிலைப்படியினை 01.07.2017 முதல் 3 சதவீதம் உயர்த்தி வழங்கிட முடிவெடுத்துள்ளது. அதன்படி, அரசு ஊழியருக்கான அகவிலைப்படியினைக் கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கிட அரசு ஆணையிடுகிறது:-

| வழங்கப்படும் நாள் | அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| 01.07..2017 முதல் | அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 139 சதவீதம் |

5. மேலும், (i) ஜூலை, 2017 முதல் செப்டம்பர், 2017 வரையிலான காலத்திற்கான உயர்த்தப்பட்ட அகவிலைப்படி நிலுவைத் தொகை உடனடியாகப் பெறப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறையான மின்னணு தீர்வு சேவை (ECS) மூலம் உடனடியாக வழங்கப்பட வேண்டும். (ii) திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே ஆணையிடப்பட்டுள்ள அகவிலைப்படி உயர்வு அகவிலைப்படியுடன் சில்லரைச் செலவு நிதியிலிருந்து நிலையான வீதத்தில் மாதாந்திர ஊதியம் பெறும் முழு நேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும். இத்திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி பகுதி நேர அலுவலர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல.

7. இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்களுக்கும், உள்ளாட்சி அமைப்பு அலுவலர்களுக்கும், பல்கலைக்கழக மானியக்குழு / அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு சம்பள வீதங்களின் கீழ் சம்பளம் பெறும் அலுவலர்களுக்கும், அரசு மற்றும் மானியம் பெறும் பல்தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிகள், சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் / உடற்பயிற்சி இயக்குநர்கள் / நூலகர்கள் ஆகியோருக்கும், வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், சத்துணவு திட்ட அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணிபுரியும் ஊராட்சி செயலாளர்கள் மற்றும் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்கள் ஆகியோருக்கும் பொருந்தும்.

8. இச்செலவு, சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பின் கீழ்வரும் "03. அகவிலைப்படி'' என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று எழுதப்பட வேண்டும்.

9. மேலே அனுமதிக்கப்பட்டுள்ள அகவிலைப்படி உயர்வு குறித்த செலவிற்கான கூடுதல் நிதி 2017-2018க்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். கூடுதல் நிதியொதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி, சம்பளம் பெற்று வழங்கும் அலுவலர்கள் கூடுதல் தவணை அகவிலைப்படியினை மேலே ஆணையிடப்பட்டுள்ளவாறு பெற்று வழங்கிட அனுமதி அளிக்கப்படுகிறது.

10. இதற்கான பட்டியல்கள் அனுப்பப்படும் போது, முதன்மை மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை-18, அவர்களிடமிருந்து அனுமதிக்காகக் காத்திராமல், திருத்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குமாறு கருவூல அலுவலர்கள் / சம்பளக் கணக்குகள் அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

11. இவ்வாணை கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1616 (ஆயிரத்து அறுநூற்றுப் பதினாறு) உடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க.சண்முகம்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

<u>பெறுநர்</u>

அனைத்து அரசுச் செயலாளர்கள்.
செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
காப்பாளர், ஆளுநர் மாளிகை, ராஜ்பவன், சென்னை–22.
ஆளுநரின் செயலாளர், ராஜ்பவன், சென்னை–22.
ஆளுநர் செயலகம், ராஜ்பவன், சென்னை–22.
அனைத்துச் செயலகத் துறைகள் (அலுவலக நடைமுறை மற்றும் பட்டியல் பிரிவுகள்).
நிதித்துறையிலுள்ள பிரிவுகள் அனைத்தும்.
அனைத்து துறைத் தலைவர்கள்.
மாநில தகவல் ஆணையம், எண்.2, தியாகராய சாலை, எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை–18.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள் / அனைத்து முதன்மை நீதித்துறை மாஜிஸ்டிரேட்கள்.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (துணிக்கை–I), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (துணிக்கை–I),சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (துணிக்கை–II), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (துணிக்கை–II), சென்னை–18 (பெயரில்).

மாநில கணக்குத் துறைத் தலைவர் (உதபி), சென்னை–9 / மதுரை.
முதன்மைச் செயலாளர் / ஆணையர், கருவூலக் கணக்குகள் துறை, சென்னை–35.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை–9.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (வடக்கு), சென்னை–79.
அனைத்து சம்பளக் கணக்குகள் அலுவலர்கள்.
அனைத்து கருவூல அலுவலகங்கள்.
அனைத்துத் துணைக் கருவூல அலுவலகங்கள்.
தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.
ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்ற ஆணையாளர், எண்.6, மாணிக்கேஸ்வரி சாலை, சென்னை–10.
பதிவாளர், உயர்நீதி மன்றம், சென்னை–104.
அனைத்து அரசுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் பதிவாளர்கள்.
அரசுக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்கள் / சட்டப்படியான வாரியங்கள்.
ஆணையாளர், மாநகராட்சி, சென்னை / மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர்.
அனைத்து கோட்ட வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையாளர்கள்.
அனைத்து கோட்டாட்சியர்கள்.
அனைத்து வட்டாட்சியர்கள்.
அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்.
திட்ட ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம், எண்.570, அண்ணா சாலை, சென்னை–18.
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பணிச்சங்கங்கள்.

<u>நகல் பெறுநர்</u>
அரசு தலைமைச் செயலாளரின் நேர்முக செயலாளர், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் நேர்முகச் செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
மத்திய அரசுச் செயலாளர், உள்துறை அமைச்சகம், புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (பொருளாதார விவகாரங்கள் துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (செலவுத்துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (வங்கிகள் வருவாய்த்துறை) புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர்,வெளிவிவகார அமைச்சகம், புதுடில்லி.
முதுநிலை ஆராய்ச்சி அலுவலர், சம்பள ஆராய்ச்சிப் பிரிவு,
நிதி அமைச்சகம் (செலவுத் துறை), அறை எண் 261, வடக்கு பிளாக், புதுடில்லி.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்கள்.

**// ஆணைப்படி : அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்**